## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 721 of 2022** |
| Deposition of witness | : | **PW - 1** |
| Name | : | **சண்முகசுந்தரம்** |
| Father Name | : | **சுடலைக்கண்ணு** |
| Age | : | **38** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.06.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் சிரியந்தூரில் வசித்து வருகிறேன். பழக்கடை வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது உறவினர். சுமார் ஒரு ஆண்டுக்கு முன்பாக மதியம் 03.00 மணி அளவில் சிரியந்துார் சாஸ்தா கோயில் அருகில் நானும் ஆஜர் எதிரிகளும் பேசிக் கொண்டிருந்தோம். நாங்கள் எல்லோரும் மது போதையில் இருந்தோம். எங்களுக்குள் பேச்சுவாக்கில் சண்டை ஏற்பட்டு ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை முகத்தில் அடித்தார்கள். அதில் இடது கண்ணுக்கு அருகே எனக்கு காயம் ஏற்பட்டது. (சாட்சி தற்போதும் தனது கண்ணில் உள்ள காயத்தின் வடுவை காண்பிக்கிறார்). நான் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னேன். 108 ஆம்புலன்ஸில் என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் 6 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அப்போது அங்கே வந்த சேரகுளம் போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொன்னதை சொன்னவாறு அதில் எழுதி இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

## குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.06.05 18:05:16 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

**DEPOSITION OF WITNESS**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 721 of 2022** |
| Deposition of witness | : | **PW - 2** |
| Name | : | **வீரபாகு பிள்ளை** |
| Father Name | : | **சங்கரலிங்க பிள்ளை** |
| Age | : | **47** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.06.2026.

**முதல் விசாரணை**

1. நான் சிரியந்தூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள். சாட்சி சண்முகசுந்தரத்தை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும் சண்முகசுந்தரத்திற்கும் என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.)**

2. கடந்த 25.08.2022 ஆம் தேதி மதியம் சுமார் 12.40 மணியளவில் எங்களது ஊரில் உள்ள சாஸ்தா கோவில் அருகே வைத்து ஆஜர் எதிரிகள் சண்முகசுந்தரத்தை கெட்ட வார்த்தையால் பேசி முகத்தில் மாறி மாறி அடித்து, இரும்பு கம்பியால் தாக்கி காயத்தை விளைவித்தார்கள் என்றாலும், நான் அதை நேரில் பார்த்தேன் என்றும் போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு

தற்போது எதிரிகள்  எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.06.05 18:05:21 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்